# தண்டனையிலிருந்து விசுவாசமுள்ள நோவாவை தேவன் இரட்சித்தார்

## ஞானஸ்நான போதகத்தோடு இணைந்தது

பிள்ளைகளின் வயதுக்கும் தேவைக்கும் ஏற்ற செயல்பாடுகளை தெரிந்து கொள்க

வேதாகமத்தை வாசித்தும் ஜெபித்தும் ஆசிரியர்கள் தங்களை ஆயத்தம் செய்வார்களாக. ஆதி. அதி. 6,7,8 ஐ வாசித்து முக்கியமான விஷயம் என்று நீங்கள் கருதுபவற்றை குறிப்பெடுக்கவும்.



அறிந்து கொள்க....

- நோவா எப்படிப்பட்ட மனிதன், 6:5-9.
- தாம் படைத்த மனித குலத்தை தேவன் ஏன் அழித்தார், 6:5-7.
- பேழை என்று அழைக்கப்பட்ட, பெரிய படகை கட்ட வேண்டும் என்ற தேவ கட்டளையை நோவா எவ்வாறு நிறைவேற்றினான், 6:13-22.
- நோவாவின் குடும்பத்தை தவிர வேறு எவற்றை தேவன் பேழைக்குள் கொண்டு வந்தார், 7:8-9.
- வெள்ளப் பெருக்கிற்கு பிற தேவனை மகிழ்ச்சியாக்கும்படி நோவா செய்தது என்ன, 8:14-22.

நோவாவும் ஜலப்பிரளயமும் பற்றிய **கதையைக் கூறவும்.** ஒரு பெரிய பிள்ளையை இதைச் செய்யுமாறு ஆயத்தப்படுத்தவும்.

மிருகங்களை பேழைக்குள் ஓட்டும் நோவாவின் கதையை **நாடகமாக்குக.** சபைத் தலைவருடன் பேசி ஏற்பாடு செய்க. குழந்தைகள் ஆராதனை வேளையின் போது பெரியவர்களுக்கு நடித்துக் காட்டட்டும். பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு ஆயத்தம் செய்வதில் உதவட்டும்.

- நோவா பேழைக்குள் அடைத்த சில மிருகங்களின் பெயர்களை சிறுவர்கள் சொல்லட்டும். (மாடு, ஆடு, குரங்கு, புலி, நாய், பூனை, கழுதை, கங்காரு, முயல் என்பன போன்றவை).
- இரண்டிரண்டு பிள்ளைகள் தாங்கள் எந்த மிருகத்தை குறிக்கப் போகிறார்கள் என்பதை தீர்மானிக்கட்டும்.
- மீதிப் பிள்ளைகள் மிருகங்கள் நடக்கும் போது அது போல் குரல் எழுப்பலாம். கழுதை கனைத்தல், சிங்கம் கர்ஜித்தல், புலி உறுமுதல், ஆடு கத்துதல், காளை அம்மா என்று அழைத்தல் (கொம்பு போல விரல்களை தலையில் வைக்கலாம்).
- நோவாவாக ஒரு பெரிய பிள்ளை நடிக்க. மிருகங்களை பேழைக்குள் பத்துதல். மிருகங்கள் இரண்டிரண்டாக வரட்டும். நோவா கூற வேண்டியது! “சீக்கிரம்! பேழைக்குள் போங்க! வெள்ளம் வரப் போகிறது!”
- விலங்குகளாக நடிப்பவர்கள் இரண்டிரண்டு பேராக முழங்காலுன்றி கைகளை ஊன்றி பேழைக்குள் நடந்து போக வேண்டும். முயலாக, கங்காராக நடிப்பவர்கள் குதித்துச் செல்லவும். அந்தந்த விலங்குகளைப் போல சத்தம் எழுப்பலாம். யானையாக நடிப்பவர்கள் குனிந்து ஒரு கையை தும்பிக்கையைப் போல அசைத்து செல்லவும்.

பிள்ளைகள் தாங்கள் நடிக்கும் மிருகங்களின் படங்களை வரையலாம். பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு உதவட்டும் (கீழே இருக்கும் மாதிரிப் படங்களைப் பார்க்கவும்).

மேலே உள்ள (பகுதி 1) கதையைப் பற்றிய கேள்விகளை சிறுவர்கள் கேட்கலாம்.

- நோவாவும் மிருகங்களும் பற்றிய நாடகத்தைப் பிள்ளைகள் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால், எந்தெந்த மிருகங்கள் என்பதைப் பெரியவர்கள் ஊகம் செய்யட்டும். சில கேள்விகளை சிறுவர்கள பெரியவர்களிடம் கேட்கட்டும்.

தண்ணீரில் மிதக்கும் **ஒரு பேழையின் படத்தை சிறுவர்கள் வரையட்டும்.**

- இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவன் விசுவாசிகளாகிய நம்மை நமது பாவங்களில் இருந்து இரட்சிக்கிறார் என்பதை எவ்வகையில் பேழை சித்தரிக்கிறது என்பதைப் பிள்ளைகளிடம் கேட்கவும். இயேசு எவ்வகையில் இந்தப் பேழையை ஒத்திருக்கிறார்?

நோவாவும் பேழையும் பற்றிய ஒரு கவிதை அல்லது பாடல் எழுதுக. பிள்ளைகள் தாங்கள் எழுதியதை ஆராதனை வேளையின் போது பெரியவர்களுக்கும், வீட்டில் பெற்றோர்களுக்கும் சொல்லலாம் அல்லது பாடிக் காட்டலாம்.

கீழே உள்ள **மிருகங்களின் படங்களை** சிறுவர்களுக்கு உதாரணமாகக் காட்டி வரையச் சொல்லலாம் அல்லது சொந்தமாக வேறு மிருகங்களை வரையலாம்.



**சங்கீதம்: சங். 32:1,3,5,7** வசனங்களை நான்கு சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

"எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான்."

"நான் அடக்கி வைத்த மட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்து போயிற்று."

"நான் என் அக்கிரமத்தை மறைக்காமல் என் பாவத்தை உமக்கு அறிவித்தேன். என் மீறுதல்களை கர்த்தருக்கு அறிக்கை இடுவேன் என்றேன். தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்."

"நீர் எனக்கு மறைவிடமாய் இருக்கிறீர். என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக் காத்து, இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்து கொள்ளும்படிச் செய்வீர்."

**மனன வசனம்** அப் 2:38.

**பெரிய பிள்ளைகள்** ஒரு சிறு கதை எழுதட்டும்.

- ஒரு பையனின் மோசமான நண்பர்கள் கடையில் இருந்து பொருளைத் திருட வருமாறு அழைக்கின்றனர். அவன் மறுக்கிறான். அவர்கள் கோபமடைந்து பல கெட்ட பெயர்கள் கூறி திட்டுகின்றனர்.
- திருடப் போகும் அவர்களைப் போலீஸ் பிடித்து ஜெயிலில் அடைக்கிறது.
- போக மறுத்த பையன் அவர்களை சந்தித்து ஆகாரம் கொடுகிறான்.

இதனுடன் பிள்ளைகள் இன்னும் விவரங்களை அவர்களது விருப்பப்படி இணைத்து கதையை முடிக்கவும். பாவம் தண்டிக்கப்பட வேண்டும் என்பதையும், ஆனால் இயேசு தேவ தண்டனையிலிருந்து நம்மை தப்புவிக்கிறார் என்பதையும் விளக்கும் ஒரு முன் மாதிரியை கதையாக கூற வேண்டும்.

**ஜெபம்:** "பிதாவே, உம்மைத் துதிக்கிறோம். நோவாவையும், அவனது மனைவியையும், அவனது பிள்ளைகளையும் நீர் காத்தது போல, தேவனின் நீதியான தண்டனையில் இருந்து இயேசுவின் மூலம் எங்களுக்கு பாதுகாப்பை அளித்தீரே! இயேசுவின் நாமத்தினால், ஆமென்."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.

Download from www.Paul-Timothy.net